

பெரம்பலூர் மாவட்ட கழக முன்னாள் செயலாளர்– முன்னாள் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் – வேப்பூர் ஒன்றிய கழகச் செயலாளர் – வேப்பூர் ஒன்றிய குழுத் துணைத் தலைவர்– தற்போதைய மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர், குன்னம் சி.இராஜேந்திரன் (72) உடல் நலக்குறைவு காரணமாக மறைந்ததையடுத்து, பெரம்பலூர் மாவட்டம், குன்னத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு,கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதில் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன். சம்பத், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் டாக்டர் எஸ்.டி.ஜெயலெட்சுமி உள்ளிட்டோர் உள்ளனர்.

### அன்றாடம் சீரழியும் சட்டம் – ஒழுங்கை சீர்படுத்தி ஜனநாயக ஆட்சியை நடத்த வேண்டும்!

# பழிவாங்கும் அரசியல் ஒருபோதும் வெற்றி பெற்றதில்லை என்பதை முதல்வர் உணர வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, செப். 8-

“பழிவாங்கும் அரசியல் ஒருபோதும் வெற்றி பெற்றதில்லை” என்ற பழைய பாடத்தைப் புதிய அரசும், முதலமைச்சரும் உணர்வது நல்லது என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதன்மைச் செயலாளரும், மேனாள் அமைச்சரும், இந்நாள் தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான திரு.கே.என்.நேரு அவர்கள் மற்றும் அவரது சகோதரர்கள் இல்லங்கள், அலுவலகங்களில் தமிழ்நாடு அரசின் லஞ்ச ஒழிப்புத் துறை நேற்று (5.9.2026) சென்று, சோதனைக்கு மேல் சோதனை போட்டனர்.

இதற்குமுன் சட்டமன்றத் தி.மு.க.வின் கொறடாவும், மேனாள் அமைச்சருமானண எ.வ.வேலு அவர்கள் மீதும் குற்றச்சாட்டு கூறி, வழக்குத் தொடர்ந்ததில், நீதிமன்றத்தின் ஆணைப்படி அப்படியே அது நிற்கும் நிலை.

**தலைமைச் செயலாளர் மீது நடவடிக்கை உண்டா?**

பழிவாங்கும் அரசியல்தான் கடந்த 100 நாள் ஆட்சியில் அரங்கேற்றப்பட்டு வருகிறது. குற்றம் சுமத்தப்பட்ட ஆளுங்கட்சியாளர்கள் மீதோ, மற்றபடி முதலமைச்சர், அமைச்சருக்குத் ‘‘தெரியாமல்’’ கூட்டணிக் கட்சியாகிய, ஆதரவு தந்து வருகின்ற கட்சியினர் மீது அடக்குமுறைப் பாய, ஆயத்தமாகக் குறிப்பெடுப்பதற்கும், மாணவர்கள் பற்றிய விவரச் சேகரிப்பிற்கும் காரணமானத் தலைமைச் செயலாளர் மீது, அக்கட்சிகளின் பொறுப்பு மிகுந்த தமிழ் மாநில செயலாளர்கள் பகிரங்கமாகக் குற்றச்சாட்டுகளை அறிவித்தும், இதுவரை எந்த சிறு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஏன்? காவல்துறையின் பல நடவடிக்கைகள், சம்பந்தப்பட்ட துறை ஆளுமைகளுக்கே தெரியாத வண்ணம் ‘Administrative Executive’ ஆக அதிகார வர்க்கத்தின்மூலம் நடைபெறும் அவலம் (மேற்சொன்ன தொடர் உச்சநீதிமன்றத்தின் 9 நீதிபதிகளின் தீர்ப்பு ஒன்றில் ஒரு நீதிபதி, மக்கள் ஓட்டுப் போட்டு ஆட்சியை நடத்துபவருக்கு ‘Political Executive’ என்ற புது சொற்றொடர் தரப்பட்டது).

இதுவரை போடப்பட்ட வழக்குகளில், உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றத்தின் விசாரணைகளில் ஆளும் அரசுக்குச் சாதகமாக இல்லாததே, பழிவாங்கும் அரசியல் நடைபெறுகிறது என்பதற்கான மறைமுகச் சுட்டிக்காட்டுதல் போன்ற நிலை அல்லவா? அது ஒருபுறம் இருக்கட்டும்!

**“எங்கள் மீது சுமத்தப்பட்டவை ஆதாரமற்றவை என்று நாங்கள் நிரூபிப்போம்!” - கே.என்.நேரு!**

விசாரணைக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்து, நீதிமன்றங்களில், “எங்கள் மீது சுமத்தப்பட்டவை ஆதாரமற்றவை என்று நாங்கள் நிரூபிப்போம்’’ என்று கூறியுள்ளதோடு, ‘இந்த அச்சுறுத்தல் அரசியலை எதிர்கொள்ளத் தயார்’ என்று கே.என்.நேரு கூறியுள்ளார்.

அதோடு, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என். நேரு குடும்பம் பாரம்பரியமான வியாபாரத்திலும், விவசாயத்திலும் லால்குடி பகுதி, மற்ற பகுதிகளில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு, வசதி படைத்தக் குடும்பத்தினர். இதற்குமுன் ஒன்றிய அரசின் வருமான வரித் துறை வழக்குகளைச் சமாளித்து, தங்களது நிலைப்பாட்டை நிரூபித்து, நெருப்பாற்றில் நீந்திப் பழக்கப்பட்டவர்கள்.

இதனால், “தமிழ்நாட்டின் ஆக்கப்பூர்வ அரசியல் நடைபெறாமல், பழிவாங்கும் எதிர்மறை அரசியல்தான் நடக்கிறது ‘ஜனநாயகன்’ ஆட்சியில்’’ என்று ஓட்டுப் போட்ட மக்களே உணரும் நிலை இப்போது! (ஆதரவு தரும் கூட்டணிக் கட்சியினரின் அதிருப்தி, மலைபோல இருக்கும் நிலையில்).

மக்கள் நாயக ஆட்சியை நடத்த வேண்டும் என்பதே பொதுவானவர்களின் கருத்து!

எனவே, ஆக்கப்பூர்வ ஆட்சியை நடத்தி, அன்றாடம் சீர்கேடு அடையும் சட்டம் ஒழுங்கைச் சரிப்படுத்தி, மக்கள் நாயக ஆட்சியை நடத்தவேண்டும் என்பதே பொதுவானவர்களின் கருத்து என்பதை மறந்தால், அதன் விளைவை அறுவடை செய்யவேண்டிய பொறுப்பு ஆளுங்கட்சியையே சாரும்.

எந்த ஆட்சியானாலும், ‘‘பழிவாங்கும் அரசியல் ஒருபோதும் வெற்றி பெற்றதில்லை’’ என்ற பழைய பாடத்தைப் புதிய அரசும், முதலமைச்சரும் உணர்வது நல்லது!

இவ்வாறு கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சி.வி.கணேசன் எம்.எல்.ஏ. அறிக்கை!



கடலூர், செப். 8 -

கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி கழக இளைஞரணி செயலாளர் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின் படி கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் (12.09.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணி யளவில், நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கொ. நந்தகோபால கிருஷ்ணன் தலைமையில் தலைமைக் கழக பிரதிநிதி கள் கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மற்றும் கழக அயலக அணி துணைச் செயலாளர் ப.பரிதி இளம்சுருதி முன்னிலையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக அனைத்து சார்பு அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:**

1) 22.8.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழுக் கூட்டத்தில், கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, பேரூர் கழக மறுசீரமைப்பு குறித்து.

2) கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

### சென்னை கிழக்கு மாவட்டம்

# துறைமுகம், எழும்பூர், அம்பத்தூர், வில்லிவாக்கம் ஆகிய தொகுதிகளின் வட்டம்-பகுதிவரையறை தொடர்பான தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்கள்!

## மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



ஆகஸ்ட் 22, சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தின் முடிவின் படி சென்னை கிழக்கு மாவட்டக் கழக ஆலோசனை கூட்டம் 05/09/2026 சனிக்கிழமையன்று தலைமைக் கழக பிரதிநிதிகள் பேரா.ஜெ. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., மற்றும் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலின்படி கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக வட்டம் பகுதி வரையறை தொடர்பான தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெறும் விவரம்

| நாள்/நேரம் | தொகுதி | இடம் | முன்னிலை |
|---|---|---|---|
| 09.09.2026 புதன்கிழமை காலை 9 மணி | துறைமுகம் தொகுதி | அன்னை தெரசா பார்ட்டி ஹால், (உடையார் மேன்சன்), ஆச்சாரப்பன் தெரு, சென்னை– 1 | எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, துறைமுகம் கிழக்கு– மேற்கு பகுதி செயலாளர்கள் |
| 09.09.2026 புதன்கிழமை காலை 10.00 மணி | எழும்பூர் தொகுதி | உமா சுவராஜ் மகால், அஷ்டபுஜம் சாலை அங்காளம்மன் கோவில் அருகில், சூளை | சொ.வேலு, வி.சுதாகர், எழும்பூர் வடக்கு– தெற்கு பகுதி செயலாளர்கள் |
| 10.09.2026 வியாழக்கிழமை காலை 11.00 மணி | அம்பத்தூர் தொகுதி | கிரண் பேலஸ் கொரட்டூர் | ஜோசப் சாமுவேல், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், அம்பத்தூர் வடக்கு– தெற்கு– கிழக்கு பகுதி செயலாளர்கள் |
| 10.09.2026 வியாழக்கிழமை மாலை 5 மணி | வில்லிவாக்கம் தொகுதி | வன்னியர் சத்திரம் மேட்டு தெரு அயனாவரம் | வே.வாசு, கூ.பீ.ஜெயின் வில்லிவாக்கம் கிழக்கு– மேற்கு பகுதி செயலாளர்கள் |

மேற்கண்ட கலந்தாய்வுக் கூட்டங்களில், அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்,பகுதிக்கழக நிர்வாகிகள், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பொருள்: பகுதி-வட்டம்மறுசீரமைப்பு குறித்து.*

**பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.**
**செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.**

### பெரம்பலூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# குன்னம் சி.ராஜேந்திரன் மறைவு!

## ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி. நேரில் அஞ்சலி!



பெரம்பலூர், செப். 8-

பெரம்பலூர் முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர், பெரம்பலூர் மாவட்ட முன்னாள் ஊராட்சி குழு தலைவர், வேப்பூர் முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர், வேப்பூர் முன்னாள் ஒன்றிய குழு துணைத் தலைவர், தற்போதைய மாநில வர்த்தக அணித் துணைச் செயலாளர் குன்னம் சி. ராஜேந்திரன் (72) உடல் நலம் பாதிக்கப்பட்டு திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று (7.9.2026) மதியம் 12.50 மணியளவில் மறைவெய்தி னார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவரது உடல் சொந்த ஊரான குன்னத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இன்று (08.09.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணியளவில் குன்னத்தில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

தகவல் அறிந்ததும் ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ. இராசா எம்.பி. நேரில் சென்று மறைந்த குன்னம் சி.ராஜேந்திரன் உடலுக்கு மலர் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தி னார்.

மேலும் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. ப.பரமேஷ்குமார்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு. அட்சய கோபால், வழக்கறிஞர் என். ராஜேந்திரன், ரோவர் கல்வி நிறுவனங்கள் தலைவர் க. வரதராஜன், ஜான் அசோக்,

பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச்செல்லி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் டாக்டர் எஸ். டி. ஜெயலெட்சுமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன்

ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம். ராஜ்குமார், செ. நல்லதம்பி, தி. மதியழகன், சி. ராஜேந்திரன், டாக்டர் செ. வல்லபன், ஒன்றிய கழக பொறுப்பாளர் அழகு. நீலமேகம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு. தங்கராசு, மாவட்ட விளை யாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ. கார்மேகம், வேப்பூர் ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் பிரபா செல்லப்பிள்ளை,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மா. பிரபாகரன், ஆர். அருண், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் மற்றும் அணி அமைப்பாளர் எம்.மணி வசகம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலரும் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி னர்.

மறைந்த குன்னம் சி. ராஜேந்திரனுக்கு ராமதிலகம் என்கிற மனைவியும், செந்தில்நாதன், வெற்றிவேல், ரமேஷ் ராஜேந்திரன் ஆகிய மூன்று மகன்களும் உள்ளனர்.

ரமேஷ் ராஜேந்திரன் என்பவர் தி. மு. க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளராக உள்ளார்.

### பெரம்பலூர் மண்ணில் திராவிட முன்னேற்றக் கழகத்தின்

# வளர்ச்சிற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் குன்னம் சி.இராஜேந்திரன்!

## மறைவு செய்தியறிந்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.8–

பெரம்பலூர் மண்ணில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்த குன்னம் சி.இராஜேந்திரன் அவர்கள் என்று கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள் ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

பெரம்பலூர் மண்ணில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணித்த குன்னம் சி. இராசேந்திரன் அவர்கள் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று, அந்த மாவட்டத்தின் பட்டிதொட்டியெங்கும் கழகத்தின் இருவண்ணக் கொடி பட்டொளி வீசிட உழைத்தவர். கழகத்தின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும், கழகத் தோழர்களை அரவணைத்து ஒருங்கிணைப்பதிலும் சிறப்புறச் செயல்பட்டு, கழகத்தை வளர்த்தவர்.

பெரம்பலூர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவராக மக்களுக்குப் பணியாற்றிய அவர், பின்னர் கழகத்தின் வர்த்தகர் அணி துணைச் செயலாளராகவும் தனது பணியைத் தொடர்ந்தார். பொறுப்புகள் மாறினாலும் அவரது பற்றும் உழைப்பும் ஒருநாளும் மாறியதில்லை.

கழகமே தன் குடும்பம்; கழகப் பணியே தன் கடமை என்ற உணர்வோடு இயங்கிய அவரது மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

கழகப் பணிகள் குறித்து அவர் பகிர்ந்துகொண்ட எண்ணங்களும், கழகத்தின் மீது அவர் கொண்டிருந்த உறுதியான பற்றும் என் நினைவில் என்றும் நிலைத்திருக்கும்.

குன்னம் சி.இராசேந்திரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், பெரம்பலூர் மாவட்டக் கழகத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



கரூர் அரசு மகளிர் மற்றும் கலைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, கல்வியியல் கல்லூரி குழுமத் தலைவர் பேராசிரியர் முனைவர் பி.நடேசன் தலைமையில் பேராசிரியர், முனைவர் பொன்.கதிரேசன் ஏற்பாட்டில் நடைபெற்ற பன்னாட்டு ஆசிரியர்கள் தின விழா,நூல் வெளியீட்டு விழா மற்றும் முப்பெரும் விழாவில், கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநிலத் தலைவரும்,தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க தலைவருமான ரெ.தங்கம் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை பணியாற்றியமைக்காக விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது. கல்லூரி குழுமத்தின் செயலாளர் என்.கண்ணன், ஆசிரியர்கள், பேராசிரியர்களும், அரசு அதிகாரிகளும், எழுத்தாளர்களும், அறிஞர்களும் பங்கேற்றனர். சிறப்பாக செயலாற்றிய பேராசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், விருதுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

### மயிலை த.வேலு பங்கேற்பு!

# தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் கூட்டம்!

## கே.எழுமலை எம்.சி. – கோ.சு.மணி அறிக்கை!

சென்னை, செப்.8-

தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதி தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் இன்று (08.09.2026 - செவ்வாய்க் கிழமை) மாலை 5 மணி அளவில் தி.நகர் மனமகிழ் மன்றம் (மாவட்ட இளைஞர் அணி அலுவலகம்) பகுதி அவைத் தலைவர்கள் மு.மணிவண்ணன், என். ராமகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில்,

மாம்பலம் ஆ.சந்திர சேகர், எஸ். மோகன், ராஜா அன்பழகன், மு.சத்தியா, எம்.எஸ்.பழனி, ஜெ.ஜானகிராமன், எம்.ஆறுமுகம், ஜி.டி.அம்பேத்கர், எஸ். பாஸ்கர் எம்.சி., பாபாசுரேஷ், க. சந்திரசேகர், சாந்திபங்காரு, ஜி.மோகன் ராஜ், இரா.பொன்னிவளவன், வி.பி.எஸ்.ஜெனார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

எனவே, தியாகராயர் நகர் தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகி கள், அனைத்து அணிகளின் மாவட்டம், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.எழுமலை எம்.சி., தியாகராயர் நகர் கிழக்கு பகுதி பொறுப்பாளர் கோ.சு. மணி ஆகியோர் கேட்டுக் கொள்கிறார்கள்.

பொருள் : செப்டம்பர் 15 - முப்பெரும் விழா, கழக ஆக்கப்பணிகள்



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் தொண்டரணி அமைப்பாளர் சுமன் அவர்களின் சகோதரர் மறைந்த சத்யா திருவுருவ படத்திறப்பு நிகழ்வு ஒன்றிய கழகச் செயலாளர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி முன்னிலையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் திருவுருப் படத்தை திறந்து வைத்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார் இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜ், மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், பொதுக்குழு உறுப்பினர் ஏ.வி.ராமமூர்த்தி, ஒன்றிய பேரூர் செயலாளர்கள் ஆ.சத்தியவேல், அபிராமி குமரவேல், நிர்வாகிகள் வி.பி.ரவிக்குமார், க.சம்பத், ஜெயலலிதா, ரவிச்சந்திரன், டில்லிசங்கர், சிவாஜி, சிவசங்கர், வெங்கடேசன், ரவி, சித்ரா முனுசாமி, ஆ.சீனிவாசன், பாபு, ரமேஷ், பழனி, ஐ.ராஜா, இ.ராஜா, சந்துரு, பார்த்திபன், கண்ணன், மகேஷ், செல்வம் உள்பட பலர் உள்ளனர்.